# Crisis Payment (நெருக்கடி கால உதவித்தொகை)

எம்மிடமிருந்து கூடுதல் உதவியை நீங்கள் எதிர்பார்க்கும் நேரம் உங்களுக்கு வரக்கூடும் என்பது எங்களுக்குத் தெரியும். சில விசேடமான தருணங்களில் உங்களுக்குத் தரப்படக்கூடிய ஒரு முறை மட்டுமே வழங்கப்படக்கூடிய உதவித்தொகையே Crisis Payment (நெருக்கடி கால உதவித்தொகை) எனப்படுகிறது.

**இது வழங்கப்படக்கூடிய காரணம் என்ன?**

கீழ்வரும் தருணங்களில் Crisis Payment (நெருக்கடி கால உதவித்தொகை) உங்களுக்கு வழங்கப்படலாம்:

- குடும்ப வன்முறை அல்லது இயற்கை அழிவு போன்ற மிகவும் மோசமான சூழ்நிலைகளில் புதிய வீடு ஒன்றைத் தேட வேண்டிய நிலைக்கோ அல்லது தேட விரும்பும் நிலைக்கோ நீங்கள் தள்ளப்படும்போது
- குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பிறகு உங்களது வீட்டில் நீங்கள் தங்க வேண்டிய நிலையில் இருக்கும்போது அல்லது குடும்ப வன்முறைக்குக் காரணமான குடும்ப அங்கத்தவர் வீட்டை விட்டு வெளியேறி இருக்கும்போது அல்லது அவர் வீட்டை விட்டு அகற்றப்பட்டிருக்கும் போது
- குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட காரணத்தினால் குறைந்தபட்சம் 14 நாட்களை சிறையிலோ அல்லது திருத்து மையம் ஒன்றிலோ கழித்து விடுவிக்கப்பட்டுள்ள நிலையில்
- மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படும் தகுந்த விசா ஒன்றின் கீழ் நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு முதல் முறையாக வந்துள்ள போது

**இதற்கு நான் தகுதி பெறுவேனா?**

நெருக்கடி கால உதவித்தொகை (Crisis Payment) ஒன்றிற்குத் தகுதி பெற மிகக் கடும் பணக் கஷ்டத்தில் நீங்கள் இருக்கவேண்டும், மற்றும் கீழ் வரும் தருணங்களில் ஏதாவதொன்றின் காரணமாக ஏழு நாட்களுக்குள் கோரிக்கையை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்:

- சமாளிக்க இயலாத ஒரு சூழ்நிலை
- நீங்கள் அனுபவித்த குடும்ப வன்முறைக்குக் காரணமான குடும்ப அங்கத்தவர் வீட்டை விட்டு வெளியேறி இருக்கும்போது அல்லது வீட்டை விட்டு அகற்றப்பட்டிருக்கும் போது
- சிறை அல்லது திருத்து மையத்திலிருந்து நீங்கள் விடுவிக்கப்பட நாள், அல்லது
- மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படும் தகுதியளிக்கும் விசா ஒன்றின் கீழ் நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வந்துள்ள முதல் நாள்

கீழ் வரும் உதவித்தொகைகளையும் நீங்கள் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும், அல்லது பெற தகுதி பெற்றிருக்க வேண்டும்:

- Centrelink (சென்ட்டர்லிங்க்) வழங்கும் ஓய்வூதியம் அல்லது உதவித்தொகை, Parenting Payment (பிள்ளை வளர்ப்புப்படி), New Start Allowance (புத்தாரம்பப் படி), Youth Allowance (இளைஞர் படி), Disability Support Pension (உடலியலாமை ஆதரவு ஓய்வூதியம்) மற்றும் Age Pension (மூப்பு ஓய்வூதியம்) அல்லது ABSTUDY Living Allowance (ஆப்ஸ்டடி செலவுப் படி) ஆகியன இதில் உள்ளடங்கும்.

Family Tax Benefit payment (குடும்ப வரி ஆதாய உதவித்தொகை) அல்லது Child Care Subsidy (குழந்தை கவனிப்பு மாணியம்) மட்டும்தான் நீங்கள் எம்மிடமிருந்து பெறும் ஒரே உரிமம் என்றால்தான் Crisis Payment (நெருக்கடி கால உதவித்தொகை)–க்கு நீங்கள் தகுதி பெறுவீர்கள்.

**Crisis Payment (நெருக்கடி கால உதவித்தொகை) மூலம் வழங்கப்படும் தொகை எவ்வளவு?**
Centrelink (சென்ட்டர்லிங்க்) உங்களுக்கு வழங்கும் ஒரு வாரத்திற்கான அடிப்படை ஓய்வூதியம் அல்லது உதவித் தொகைக்கு சமமான Crisis Payment (நெருக்கடி கால உதவித்தொகை) உங்களுக்கு வழங்கப்படும். Rent Assistance (வாடகை ஒத்தாசை) அல்லது Pharmaceutical Allowance (மருந்துப் படி) போன்ற கூடுதல் உதவித்தொகைகளை இது உள்ளடக்காது. இரு வாரங்களுக்கு ஒரு முறை உங்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும் உதவித்தொகையுடன் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் இந்த கூடுதல் உதவித்தொகை கிடைக்கும்.

**Hardship Allowance (கஷ்டகால உதவி)**
உங்களுக்குத் தகுதி இருந்தால், Crisis Payment (நெருக்கடி கால உதவித்தொகை) – உடன் சேர்த்து உங்களது ஓய்வூதியம் அல்லது உதவித்தொகையின் முதல் தவணையின் ஒரு பகுதியை முன்பாகவே தருமாறு கேட்டு நீங்கள் விண்ணப்பிக்கலாம். இது Hardship Advance (கஷ்டகால முன்பணம்) எனப்படும்.

**மேலதிகத் தகவலுக்கு**

| | | |
|---|---|---|
| **வேலைதேடல் சேவைகள்** | | **132 850** |
| **மூத்த அவுஸ்திரேலியர் தொலைபேசி இணைப்பு** | | **132 300** |
| **உடலியலாமை மற்றும் கவனிப்பாளர்கள்** | | **132 717** |
| **குடும்பங்கள் மற்றும் பெற்றோர்கள் தொலைபேசி இணைப்பு** | | **136 150** |
| **இளைஞர்கள் மற்றும் மாணவர்கள்** | | **132 490** |
| **TTY* விசாரிப்புகள்** | **இலவச அழைப்பு** | **1800 810 586** |

*TTY என்பது காது கேளாதவர்கள் அல்லது செவித்திறன் மற்றும் பேச்சுத் திறன் குறைந்தவர்களுககு மட்டுமே உள்ள சேவையாகும். இச் சேவையைப் பயன்படுத்த TTY தொலைபேசி ஒன்று தேவைப்படும்.

வேறு மொழியில் உள்ள தகவல்களுக்கு **humanservices.gov.au** எனும் எமது வலைத்தளத்திற்குச் சென்று ‘உங்கள் மொழியில் உள்ள தகவல்கள்’ எனும் பகுதியைத் தெரிவு செய்யுங்கள் அல்லது **131 202*** எனும் இலக்கத்தில் எமது பன்மொழித் தொலைபேசிச் சேவையை அழையுங்கள்.

*‘13’ எனும் இலக்கத்தில் துவங்கும் திணைக்களத்தாரது தொலைபேசிகளுக்கு உங்கள் வீட்டுத் தொலைபேசியிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு உங்களது தொலைபேசி சேவை வழங்குநரைப் பொறுத்து கட்டணங்கள் வேறுபடும். பொதுத் தொலைபேசிகள் மற்றும் மொபைல் தொலைபேசிகளிலிருந்து செய்யப்படும் அழைப்புகளுக்கு அதி வீதக் கட்டணங்கள் அரவிடப்படும்.

# Crisis Payment

We understand there may be times when you need additional support from us. Crisis Payment is a special one-off payment that may be paid to you in certain special circumstances.

## Why is it paid?

Crisis Payment may be paid when you:

- have been forced to leave your home and establish, or intend to establish, a new home because of an extreme circumstance such as domestic violence or a natural disaster
- remain in your home after experiencing domestic violence and the family member responsible has left or been removed from the home
- have been released from prison or a correctional centre after being imprisoned for a period of at least 14 days as a result of being charged with an offence, or
- have arrived in Australia for the first time on a qualifying humanitarian visa.

## Am I eligible?

To be eligible for a Crisis Payment, you must be in severe financial hardship and must make a claim within seven days of one of the following events:

- an extreme circumstance
- the family member responsible for you experiencing domestic violence leaves, or is removed from your home
- the date you were released from prison or correctional centre, or
- your first arrival in Australia on a qualifying humanitarian visa.

You must also be receiving, or be eligible to receive:

- a Centrelink pension or benefit − this includes payments such as Parenting Payment, Newstart Allowance, Youth Allowance, Disability Support Pension and Age Pension, or ABSTUDY Living Allowance.

You will not be eligible for a Crisis Payment if your only entitlement from us is a Family Tax Benefit payment or Child Care Subsidy.

## How much is the Crisis Payment?

The amount of Crisis Payment is equal to one week's payment of your basic Centrelink pension or benefit. This doesn't include additional payments such as Rent Assistance or Pharmaceutical Allowance. This payment is a one-off addition to your regular fortnightly payment.

## Hardship Advance

In addition to Crisis Payment, you may also apply to have part of your first instalment of pension or benefit paid early if eligible. This is called a Hardship Advance.

## For more information

| | |
|---|---|
| **Employment Services** | **132 850** |
| **Older Australians line** | **132 300** |
| **Disability and Carers** | **132 717** |
| **Families and Parents line** | **136 150** |
| **Youth and Students** | **132 490** |
| **TTY* enquiries** | **Freecall 1800 810 586** |

*TTY is only for people who are deaf or have a hearing or speech impairment. A TTY phone is required to use this service.

For information in other languages visit our website at **humanservices.gov.au** and click on ‘Information in your language’ or call our multilingual phone service on **131 202***.

Charges for calls from your home phone to the department’s ‘13’ numbers vary depending on your telephone service provider. Calls from public and mobile phones are charged at a higher rate.